திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அந்த வங்கியின் சீஃப் பிரமோட்டராகப் பொறுப்பு வகித்து வந்தவர் நகர மன்றத்தில் உறுப்பினராக இருக்கிறார். ஆனால் அவரைத் தலைவ ராகப் போடாமல் வேறு ஒருவரைப் போட்டதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விபரம் அறிந்து சொல்லலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஒருவரைத் தலைவராகப் போட் டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி யானால் அவர் யார் என்பது பற்றிய விபரமும் அமைச்சரிடம் இருக்க வேண்டும். அவரைப் போட்டிருப்பதற்கு ஏதாவது தனிக் காரணங்கள் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்குத்தான் தனிக் கேள்வி போடச் சொல்லிவிட்டாரே. தனியாகக் கேளுங் கள். பதில் சொல்லுவதும் சொல்லாததும் அமைச்சருடைய விருப்பம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, வங்கி 23—8—1971 முதல் செயல்படத் தொடங்கிவிட்டதால் நிச்சயமாக அதற்கு ஒரு தலைவர் இருப்பார். தலைவர் இல்லாமல் வங்கி தொடங்கப்பட்டிருக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் சொன்னேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அந்த வங்கி ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தவர்கள், அதற்காகப் பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து, அதற்காகப் பணியாற்றிய வர்களை விட்டுவிட்டு, அதற்குச் சம்பந்தமில்லாதவர்கள் வங்கியின் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, யார் யார் அந்த வங்கிக்காகப் பணியாற்றினார்களோ அவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். யார் யார் நியமிக்கப்பட்டிருக்கி றார்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திருச்செந்தூரில் பனங்கற்கண்டு தொழிற்சாலை

***579. வினா—திரு கே. என். குமாரசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூரில், கூட்டுறவுத் துறையின் மூலம் பனங்கற்கண்டு தொழிற்சாலை நிறுவும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, பனங்கற்கண்டு தயார் செய்வதற்காகப் பனை மரங்களை அரசாங்கம் தனியாருக்குக் குத்தகைக்கு விடவேண்டுமென்று சில தனியார்கள் கோரி இருக்கிறார்களே, அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே. இந்தக் கற்கண்டு உற்பத்தியை அவர்கள் வீட்டிலே குடிசைத் தொழிலாக வைத்து நடத்துகிறார்கள். பனைமரங்கள் எப்படிக் குத்தகைக்கு விடப்படுகின்றன என்ற விபரத்திற்குத் தனிக் கேள்வி போடவும்.

எத்திலோடு ஊராட்சி கிராமங்களுக்கு கிணறுகள்

*** 580. வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள எத்தி லோடு ஊராட்சிக்குட்பட்ட A. R.C. கிராமங்களில் திட்டத்தின்கீழ் கிணறுகள் அமைப்பதற்கு ஆய்வு செய்யப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம், மேற்படி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த 28 கிராமங்களில் விவசாய மறுநிதிக் கழகத்தின் உதவி யுடன் கிணறுகள் அமைக்கவும், ஆழப்படுத்தவும் மின் விசை யேற்றங்கள் அமைப்பதற்குமான விவசாய அபிவிருத்தி திட்டம் ஒன்று மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து வந்துள்ளது. இதில் எத்திலோடு கிராமம் ஒன்றாகும். இத்திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளது.

கூட்டுறவுத்துறையின் சாதனைகள்

*** 581. வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கூட்டுறவுத் துறையின் சாதனைகளை விளக்குவதற்கு பிரச்சாரம் செய்வது குறித்து அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம். கூட்டுறவுத் துறையின் சாதனைகளை விளக்குவதற்கும் பிரசாரம் செய்வதற்கும் வேண்டிய திட்டம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.